1983 பிப்ரவரி 14]

கிறது. இந்த லீக்கேஜ்ஜை அடைத்து பழுது பார்த்தால் போதும். இந்த 9 குளங்களுக்கு தண்ணீர் கொடுக்கமுடியும். அதை கணக்கில் எடுத்துக்கொண்டு இதை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது குறித்து பரிசீலனை செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, லீக்கேஜ் ஆவதைத் தடுத்தாலே—உறுதியான அளவு இல்லாவிட்டாலும் கூட—ஓரளவு தண்ணீர் கொடுக்க முடியும் என்று என்ஜினீயர்கள் சொல்கிறார்கள். ஆனால், அதற்கு வேண்டிய, அந்த வேலை செய்வதற்கு, இந்த வறட்சி நிவாரண ஏற்பாடுகளில்கூட, அந்த வேலையைச் செய்யலாம் என்று சொன்னாலும் கூட, பொதுப்பணித்துறைக்கு சிமெண்ட் கிடைப்பதற்கு முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாக கவனித்து இந்த வறட்சி நிவாரண வேலையில் இப்படிப்பட்ட லீக்கேஜை அடைப்பதற்குத் தேவையான சிமெண்ட்டை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணியில் சிமெண்ட் கிடைக்கவில்லை என்பதற்காக பணி நின்றுவிடக்கூடாது என்று கருதி இப்போது இறக்குமதி செய்யப்படுகின்ற சிமெண்ட்டில் அவர்களுக்கு தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அங்கே நிச்சயமாக சிமெண்ட் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் துவங்கிடும் தொழிற்சாலைகள்.

*வினா எண். 279—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு புதிதாகத் தொழில் துவங்கும் தொழிற்சாலைகளுக்கு சிமெண்ட் பெர்மிட் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு புதிதாகத் தொழில் துவங்கும், தொழிற்சாலைகளுக்கு சிமெண்ட் வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1983 பிப்ரவரி 14

(ஆ) ஒவ்வொரு காலாண்டிலும் மாநிலத்திற்கென ஒதுக்கப்படும் சிமெண்ட்டில் ஒரு குறிப்பிட்ட அளவு சிறுதொழில்களுக்கென ஒதுக்கப்படுகிறது.

திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலேயிருந்த ஆட்சிக் காலத்திலே சிமெண்ட்டை மூலப் பொருளாகக் கொண்டு நடத்தும் தொழிற்சாலைக்கு சிமெண்ட் பெர்மிட் வழங்கப்பட்டுள்ளதா ? அப்படியானால், எத்தனை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே சுமார் 13 ஆயிரம் டன்கள் வரைக்கும் சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு சிறுதொழில்களுக்கு ஒவ்வொரு காலாண்டும் வழங்கப்பட்டு உள்ளது. எத்தனை தொழில்களுக்கு என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. அதற்கென தனிக்கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. ச. அங்குசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழிலாக நடத்திக்கொண்டு இருக்கும் மொசைக்கல் தயாரித்தல், சிமெண்ட் கிராதி தயாரித்தல், சிமெண்ட் ஸ்லாப் தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நடத்துபவர்களுக்குப் பர்மிட் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

திருச்சி மாவட்டத்தில் சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 280—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஆம். திருச்சி மாவட்டம் மாயனூரில் சுமார் 8 கோடி மதிப்பீட்டில் ஒரு சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படவிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS